செ.வெ.எண்:57/அக்டோபர்/2020 நாள்:15.10.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் போலியான மருத்துவ காப்பீட்டுத்திட்ட அட்டைகள் வழங்குவது குறித்து அரசுக்கு புகார்கள் வரப்பெற்றுள்ளது. மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டைகள் வழங்குவதற்கு தனிநபர்களுக்கு அரசால் அதிகாரம் ஏதும் வழங்கப்படவில்லை. மீறி போலியான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை வழங்குபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் எச்சரிக்கை**

-----------------

தமிழ்நாட்டை இருப்பிடமாக கொண்ட தமிழ்நாட்டில் வசிக்கக்கூடிய வருட வருமானம் ரூ.72,000/-க்கீழ் உள்ள குடும்பங்களுக்கு மருத்துவ உயர் சிகிச்சை அளிக்கும் பொருட்டு தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத்திட்டம் மற்றும் பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்ட அடையாள அட்டைகள் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களில் செயல்பட்டு வரும் மாவட்ட மருத்துவ காப்பீட்டுத்திட்ட அலுவலகம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக சில தனிநபர்கள் ரூ.20 முதல் ரூ.150 வரை பணம் பெற்றுகொண்டு போலியான மருத்துவ காப்பீட்டுத்திட்ட அட்டைகள் வழங்குவது குறித்து அரசுக்கு புகார்கள் வரப்பெற்றுள்ளது. மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டைகள் வழங்குவதற்கு தனிநபர்களுக்கு அரசால் அதிகாரம் ஏதும் வழங்கப்படவில்லை. மக்கள் இதனை நம்பி ஏமாற வேண்டாம். இது குறித்து புகார் அளிக்க இலவச எண்:18004253993-யை தொடர்பு கொள்ள பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**